கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கடலூர்

**O.S.No.398-2017** தேதி: **17.03.2026**

பிரதிவாதி தரப்பு சாட்சி -5 (மகேஷ், த/பெ.கலியபெருமாள்) சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

(1) வழக்கு யார் யார் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் ஜெயசந்திரன் வேல்முருகன் மீது தாக்கல் செய்துள்ளார். வழக்கு சொத்தின் சர்வே எண் என்ன என்றால் எனக்கு தெரியாது. வழக்கு சொத்திற்கு அருகில் எனக்கு நிலம் உண்டா என்றால் இல்லை. நான் சின்னகாட்டுசாலையில் தான் வசித்து வருகிறேன் என்பதை காண்பிக்க ஆதாரம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

(2) வழக்கு சொத்தில் சர்வே எண் 11/3 க்கு என்ன சக்குபந்தி என்றால் தெற்கால் வேல்முருகன், வடக்கால் வேல்முருகன் வீடு, கிழக்கால் சரவணண் வீடு, மேற்கு நாயுடு உள்ளார். சர்வே எண் 11/8 க்கு என்ன சக்குபந்தி என்றால் எனக்கு தெரியாது. வேல்முருகன் இருக்கும் இடத்தில் புளியாமரம் மற்றும் மாமரம் உள்ளதா என்றால் உள்ளது. அந்த மரங்களை வருடாந்தரத்திற்கு ஒரு முறை அரசாங்கம் ஏலத்திற்கு விடும் என்றால் எனக்கு தெரியாது. அந்த இடத்தில் ராமலிங்கசாமி படம் வைத்து ஒரு சிறிய கொட்டகை இருந்தது என்றால் முன்பு இருந்தது தற்போது இல்லை.

(3) ராமலிங்கசாமி படத்திற்கு பூஜை செய்வது வழக்கமா என்றால் எனக்கு தெரியாது. வடலூர் வள்ளலார் சபையில் இருந்து அந்த இடத்தை மேற்பார்வை

PHEBE B

Digitally signed by PHEBE B
Date: 2026.03.17 17:54:38 +0530

இட வந்தார்கள் என்றால் எனக்கு தெரியது. வடலூர் வள்ளலார் சபையில் இருந்து வருவதையும் அரசாங்கம் ஏலம் விடுவதையும் ஜெயசந்திரன் தடுப்பது வழக்கம் என்றால் எனக்கு தெரியாது.

(4) வழக்கு சொத்தில் உள்ள புளியமரம் மற்றும் மாமரத்தில் உள்ள பழங்களை யார் எடுத்து செல்வார்கள் என்றால் எனக்கு தெரியாது. வழக்கு சொத்தில் உள்ள வீட்டின் விஸ்தீரனம் என்ன என்றால் எனக்கு தெரியாது. விவசாய நிலம் எவ்வளவு விஸ்தீரனம் என்றால் சுமார் 2, 3 ஏக்கர் இருக்கும். இந்த 2, 3 ஏக்கருக்கு தான் வழக்கு என்றால் இல்லை.

(5) வழக்கு சொத்து என்பது என்ன என்றால் ஜெயசந்திரனின் நிலத்திற்கு தான் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஜெயசந்திரனின் நிலத்திற்கு உரிமை இருப்பதால் தான் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. வழக்கு சொத்தில் என்ன பயிர் செய்துள்ளார்கள் என்றால் வாழை கரும்பு இருக்கும். நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் ஏர் ஓட்டச் செல்கிறேன். நான் வழக்கு சொத்தில் ஏர் ஓட்டுவதால் அதனைப்பற்றி தெரியும் என்று எனது வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை.

(6) கரும்பு பயிரை எந்த ஆலைக்கு கொடுப்பார்கள் என்றால் நெல்லிக்குப்பத்தில் உள்ள ஆலைக்கு கொடுப்பார்கள். வேல்முருகன் நெல்லிக்குப்பத்தில் சென்று கரும்பு ஆலைக்கு கரும்பபை கொடுப்பதற்கு ஆதாரம் ஏதேனும் நான் பார்த்துள்னே என்றல் இல்லை. அவர் தாக்கல் செய்துள்ளாரா என்று கேட்டு அறிந்துகொண்டேனா என்றால் இல்லை.

(7) நான் வெளிநாட்டிற்கு செல்வது வழக்கமா என்றால் ஒரு முறை மட்டும்

சென்றுள்ளேன். நான் வெளிநாட்டிற்கு சென்ற அந்த ஒரு வருடத்தில் அவர் என்ன பயிர் வைத்தார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். அப்படி இருக்க வேல்முருகன் தொடர்ச்சியாக 30 வருடங்கள் பயிர் வைத்துள்ளார் என்று நான் கூறுவது தவறு என்றால் சரியல்ல. அந்த ஒரு வருடம் என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது.

(8) போர் எங்கு உள்ளது என்றால் வேல்முருகனின் பொது சொத்தில் உள்ளது. எத்தனை போர்கள் என்றால் ஒரு போர் தான் உள்ளது. 3 வது நபர்கள் பயிர் வைத்துள்ளதாக நான் எனது வாக்குமூலத்தில் கூறியுள்ளதற்கு ஆதாரம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 3 வது நபருக்கு ஆதாரம் இல்லாமல் குத்தகை கொடுத்துள்ளார்களா என்றால் வாய்மொழியாக்கத்தான் குத்தகைக்கு கொடுத்துள்ளார்கள். தற்போது தான் எழுத்துமூலமாக கொடுத்துள்ளார்கள்.

(9) குப்புசாமி மகன் ரவி என்பவருக்கு நான் தற்போது பயிர் வைத்து வருகிறேன் என்றால் சரிதான். அதற்கு ஆதாரம் உள்ளதா என்றால் உள்ளது. அதை தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் தயாராகத்தான் உள்ளேன். ஏற்கனவே வேல்முருகனுக்கு வாதி ஜெயசந்திரனுக்கும் வேறு பிரச்சனை இருந்தது என்றால் எனக்கு தெரியாது. அந்த இடத்தில் வேல்முருகன் கூறியதன் பெயரில் பயிர் வைத்தேன் என்றால் சரியல்ல. ஏற்கனேவ ஜெயசந்திரன் மற்றும் அவரது மணைவி இருவரும் காவல் நிலையத்தில் என் மீது புகார் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் தான் அந்த புகார் என்றால் சரிதான். <u>இது வா.த.சா.ஆ.**15** மற்றும் **16**</u>

PHEBE B Digitally signed by PHEBE B Date: 2026.03.17 17:54:47 +0530

<u>ஆக குறியீடு செய்யப்படுகிறது.</u> இதற்கு முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் தான் அந்த முதல் தகவல் அறிக்கை என்றால் சரிதான். <u>இது வா.த.சா.ஆ.17 ஆக குறியீடு செய்யப்படுகிறது.</u> இந்த வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான்.

(10) வழக்கு சொத்து 1 ஆம் அயிட்டத்தினை ஜெயசந்திரன் மற்றும் அவரது குடும்பத்தினர் தான் அனுபவித்து வந்தார்கள் என்றாலும் நான் விரோதத்தின் காரணமாக மாற்றி பொய்சாட்சி கூறுகிறேன் என்றால் சரியல்ல.

வா.த.சா.ஆ.15 முதல் 17 வரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

குறுக்கு விசாரணை முற்றிற்று .

மறுவிசாரணை இல்லை.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவரிடம் கையொப்பம் பெறப்பட்டது.

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be correct.*

PHEBE B Digitally signed by PHEBE B Date: 2026.03.17 17:54:51 +0530

***Additional District Munsif ,***
***Cuddalore.***